
சிறப்புச் சிறுகதை


# லவ் லவ்!



இந்தியா அவளுடைய கனவு தேசம். ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், சத்குருக்களும் வாழ்ந்த புண்ணிய பூமி. அதிலும் சென்னை தாண்டி மலைகள் சூழ்ந்துள்ள அந்த ஆஸ்ரமத்தைக் காண வேண்டுமென்பது அவளின் தீராத ஆசை.

அந்த ஆஸ்ரமத்தில் உள்ள அனைவரும் திருமணம் செய்து கொள்ளாதவர்கள். சந்நியாசிகள், வெள்ளை உடை அணிபவர்கள். அன்பின் பிரதி பிம்பங்கள். கருணை வடிவானவர்கள். தன் உயிரைப் போன்று அனைத்து

# இந்துமதி



சிறப்புச் சிறுகதை

உயிர்களையும் மதிப்பவர்கள், எந்த உயிரையும் துன்புறுத்தாதவர்கள். ஈ எறும்பு, புழு, பூச்சி எல்லாவற்றிலும் ஆத்மாவைக் காண்பவர்கள். அவர்களைப் போன்று பிரிதொரு மனிதர்களைக் காண முடியாது. அத்தனை நேயம் கொண்டவர்கள்...

நியூயார்க் வந்து யோகமும், தியானமும் கற்றுக் கொடுத்த தாடிச் சாமியாரிடம் கேள்வி மேல் கேள்விகளாகக் கேட்டு அறிந்து கொண்ட விவரங்கள்.

அவள் அமெரிக்க நாட்டின் மிகப் பிரபலமான பாடகி. தானே இயற்றி, தானே இசையமைத்த பாடல்களைத் தன் குழுவினருடன் சேர்ந்து மேடையில் தோன்றி பாடி ஆடுகிறபோது - எதிரில் உள்ள பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் தேன் குடித்த நரிகளைப் போல் கிறங்கிப் போவார்கள்.

அதுவும் அவள் தாடிச் சாமியாரிடம் யோகமும், தியானமும் பயின்ற பின்பு, வேளை தவறாது முறையாகப் பயிற்சி செய்ய ஆரம்பித்த பின்பு, மாமிசம், மது, சிகரெட் ஒதுக்கிய பின்பு, வெறும் காய்கறிகளையும், பழங்களையும் உணவாகப் பழக்கப்படுத்திய பின்பு, நிறையவே மாறிப் போயிருந்தாள். கோபம் அவளை விட்டு அகன்றது. நிதானமும், பொறுமையும் வந்தடைந்தன. யாரைப் பார்த்தாலும், எதைப் பார்த்தாலும் அன்பு வெள்ளமாகப் பொங்கித் ததும்பியது. அந்த மனநிலையில் அவள் எழுதி இசையமைத்த பாடல்...

லவ் லவ் எவ்ரி வேர் லவ்

லவ் லவ் எவ்ரி திங் ஈஸ் லவ்

லவ் லவ் எவ்ரி லிவிங் பீயிங் ஈஸ் லவ்

லவ் லவ் எவ்ரி க்ரீச்சர் ஈஸ் லவ்

லவ் லவ் எவ்ரி பிளாண்ட், ட்ரீ, மட், ஸ்டோன் ஈஸ் லவ்

லவ்-லவ் எவ்ரிதிங்-ஆஸ் யு லவ் யுவர் செல்ஃப்...

அந்தப் பாடல் அமெரிக்க தேசம் முழுதும் ஒலித்து பிரஸித்தி பெற்ற பாடலாயிற்று. ஒவ்வொரு அமெரிக்கப் பிரஜையும் அந்தப் பாடலை உச்சரிப்பதில் பெருமையடைந்தனர். அதன் பின் அவர்கள் மரங்களையும், செடி, கொடிகளையும், மற்ற உயிரினங்களையும் பார்த்த பார்வை

**"பல்லக்குத் தூக்கியை ஏன் மன்னர் கட்டி வெச்சு அடிக்கிறார்!"**

**"மகாராணியை 350Kg தாஜ்மஹாலேன்னு வர்ணிச்சு பாடியிருக்கான்!"**

- அ.ரியாஸ்

வித்தியாசப்பட்டது. வெள்ளை மாளிகை தம்பதிகள் அப்பாடலில் கிளர்ச்சியுற்று அவளை விருந்திற்கு அழைத்து கௌரவித்தனர்.

அந்தப் பாடலைக் கொண்ட ஆல்பம் லட்சக் கணக்கில் விற்று கோடிக் கணக்கில் பணம் புரண்ட போது அவளுக்குள் மின்னல் போல் ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

'இந்தியாவிற்குக் கிளம்பிப் போய் இந்த ஆல்பம் ஈட்டித் தந்த பணம் முழுவதையும் அந்த ஆஸ்ரமத்திற்குத் தந்து விட்டால் என்ன..?

உடனே அதை செயல்படுத்துவதில் இறங்கினாள்.

"ஹேய் ராபர்ட் இந்த கிறிஸ்மஸுக்கு நாம் விடுமுறை எடுக்கிறோம். பதினைந்து நாட்களை நமக்காகவென்றே ஒதுக்கி வைக்கிறோம்."

"ஓ..! தட்ஸ் கிரேட்...!"



என்று உற்சாகமான ராபர்ட் அவளைத் தூக்கி குழந்தை மாதிரி தட்டாமாலை சுற்றி கன்னங்களில் முத்தமிட்டுச் சொன்னான்.

"நாம் நமக்கென்று நேரம் எடுத்து சந்தோஷமாக இருந்து வெகுகாலம் ஆயிற்று லிண்டா.. நீ எல்லாவற்றையும் ஒதுக்கிய மாதிரி என்னையும் ஒதுக்கி விட்டாய். உன் ஆஸ்ரமத்து ஆண்களைப் போல் என்னையும் பிரம்மச்சாரியாக்கி விட்டாய்."

"நோ.. நோ.. எப்போதும் என் இதயத்திலும், எண்ணத்திலும் இருப்பவன் நீதான் ராபர்ட்."

"எண்ணத்திலும், இதயத்திலும் இருந்து விட்டால் மட்டும் போதுமா? முன்பிருந்ததைப் போல் உடலோடு ஐக்கியமாக வேண்டாமா? உன்னோடு சேர்ந்து ஸ்காட்ச் விஸ்கி குடித்து, ஸிஸிலர்ஸ் சாப்பிட்டு, உனக்குப் பிடித்த ஸிகார் புகைத்து, உன்னைக் கட்டிப் பிடித்து, உனக்குள் புதைந்து விடிய விடிய-"

"ஹேய் நிறுத்து.. நிறுத்து!" - இடையில் குறுக்கிட்ட லிண்டா, மிக மென்மையாகப் புன்னகைத்தாள்.

"எங்கே போகிறோம்?"

"இண்டியா!"

**ம**று வாரத்தின் ஒரு நள்ளிரவில் விமானம் பிடித்து அடுத்த நாள் நள்ளிரவில் சென்னை விமான நிலையம்

வந்திறங்கினார்கள். யாரோ வழிப்போக்கர்கள் போன்று ஒரு சாதாரண மூன்று நட்சத்திர ஓட்டலில் தங்கினார்கள். ஜெட்லாகும் பிரயாணக் களைப்பும் தீர குளிக்கப் போன ராபர்ட் அரண்டு அலறி வெளியில் ஓடி வந்து தொலைபேசியில் ஹவுஸ் கீப்பிங் பையனை அழைத்தான்.

அது வரை வராந்தாவில் நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் அவனது அலறல் சத்தம் கேட்டு உள்ளே வந்தாள்.

"என்ன ராபர்ட்?"

"பாத்ரூமில் கரப்பான் பூச்சி! ரெண்டு கரப்பான் பூச்சி. அடிக்க ரூம் பாயை வரச் சொல்லியிருக்கிறேன்."

"ஓ... நோ..." என தலையாட்டிய அவள், துடைப்பமும், பூச்சிக் கொல்லி மருந்துமாக வந்த அறைப் பையனை வெளியே அனுப்பி விட்டு ராபர்ட்டிடம் கூறினாள்.

"அதுவும் உயிர்தான் ராபர்ட். அதனுள் இருப்பதும் உன்னுள் இருப்பதும் ஒன்றுதான். அதைப் பார்த்து ஏன் இப்படி அலறுகிறாய் ராபர்ட்? அது உன்னை என்ன செய்கிறது? கடிக்கிறதா, அல்லது காயப்படுத்துகிறதா... என்ன செய்கிறது?"

"ஒன்றும் செய்வதில்லைதான். ஆனால் அதைப் பார்த்தாலே அசிங்கமாய் அருவருப்பாய் இருக்கிறது..."

"அருவருப்பாய் இருப்பதையெல்லாம் கொன்று விட வேண்டுமா? அருவருப்பு காரணமாக அப்பாவியான அதைக் கொல்ல நினைக்கிறாய். உன்னைப் பார்த்து பயந்து ஒரு பாவமும் அறியாத அது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அறை முழுதும் ஓடி தப்பிக்கப் பார்க்கிறது. உன் அருவருப்பு பெரிதா, அதன் உயிர்ப் பயம் பெரிதா சொல் ராபர்ட்."

"அதெல்லாம் கிடக்கட்டும். அந்த ரெண்டு கரப்பான் பூச்சியும் என்ன ஆயிற்று?"

"ஓடிப்போய் விட்டது. எந்த சாக்கடை வழியாக வந்ததோ அதே சாக்கடை வழியாகவே ஓடிப் போய்விட்டது." எனக் கூறி

"டாக்டர்! முப்பது வருஷம் முன்னாடி வந்த பழைய கனவே மறுபடியும் வருது."

"நிஜமாவா?"

"ஆமாம் டாக்டர் டிஜிட்டல்ல வருது..."

- வி.பார்த்தசாரதி

குழந்தையாகச் சிரித்தாள்.

மறுநாள் காலை. பயணம் - பயணம் - இதோ

ஆஸ்ரமம் வந்து விட்டது. புன்னகையும் பரவசமுமாக ஆஸ்ரம வாசலில் நின்றாள். ஆஸ்ரம வாயிலை, மண் தரையை, பிரமாண்டமான வேப்ப மரத்தை அதன் நிழலில் படுத்திருந்த நாய்களை பார்த்தவாறே நின்றவளை நினைவுக்குக் கொண்டு வந்தான் ராபர்ட்.

“என்ன விண்டா?”

“எத்தனை மோனமான அழகு ராபர்ட்!”

உள்ளே சென்று அலுவலக அறை எனப் பெயர்ப் பலகை போட்டிருந்த அறையினுள் நுழைந்தார்கள். மேஜையில் பின்னால் அமர்ந்திருந்த பெரியவருக்குக் கை கூப்பினாள் அவள். பதிலுக்கு அவரும் கை



கூப்புவார் என எதிர்பார்த்து ஏமாந்தாள். அவர்களை ஏறிட்ட அந்தப் பெரியவரின் முகத்தில் எந்த பாவமுமில்லை. புன் சிரிப்பு கூட எட்டிப் பார்க்கவில்லை.

“நான் விண்டா. இவர் ராபர்ட்!” அறிமுகப்படுத்திக் கொண்டதும்

“எஸ்?” என்றார் அவர்.

“நாங்கள் நியூயார்க்கிலிருந்து வருகிறோம்.”

“எஸ்...” - என்ற குரலில் ‘அதனால் என்ன’ என்கிற அலுப்பு தெரிந்தது.

“பத்து நாட்கள் இங்கே தங்க வந்திருக்கிறோம்.”

“முன் பதிவு செய்திருக்கிறீர்களா?”

“ஆஸ்ரமத்தில் தங்கக்கூடவா முன்பதிவு செய்ய வேண்டும்?”

“கட்டாயம் முன் பதிவு செய்திருக்க வேண்டும். இது டிசம்பர் மாதம். கிறிஸ்மஸ் விடுமுறை. இந்த சீஸனில் நிறைய வெளிநாட்டுக்காரர்கள் வந்து தங்குவார்கள். அறை கிடைப்பது கடினம்.”

“அது எங்களுக்குத் தெரியாதே..”

“அதற்கு நான் என்ன செய்ய முடியும்?”

“ஆஸ்ரமத்தின் எளிமை, தூய்மை இவற்றிற்காகவே இங்கு வந்துள்ளோம். தயவு செய்து ஒரு அறை ஒதுக்கித் தாருங்கள்.”

'சொல்லாமல் கொள்ளாமல் வந்து விடுவார்கள். நாம் தான் தலையைப் பியித்துக் கொள்ள வேண்டும்?' என முணுமுணுத்தவாறே எழுந்து பக்கத்திலிருந்த அலமாரியைத் திறந்து பெரிய லெட்ஜர் ஒன்றை எடுத்து மேஜை மீது போட்ட போது அதிலிருந்து கரப்பான் பூச்சி ஒன்று கீழே குதித்தது. கரப்பான் பூச்சியைக் கண்ட ராபர்ட் அதிர்ந்து பின்னால் நகர்ந்தான்.

"டேய் முனுசாமி... ஏழுமலை...



ஓடியாங்கடா..." எனக் குரல் கொடுத்த பெரியவர் அவர்களின் வருகைக்குக் காத்திராமல் தன் கால் செருப்பைக் கழற்றி கரப்பை அடிக்கக் கை ஓங்கினார்.

"ஓ... நோ... நோ..." எனப் பதறி அவரைத் தடுக்க முயன்றாள் விண்டா. ஆனால் அவரோ அவளை சிறிதும் லட்சியம் செய்யாமல் இங்கும் அங்குமாய் பயந்தோடிய கரப்பான் பூச்சியை மூலையில் மடக்கி செருப்பால் பொத்து பொத்தென்று போட்டார். கனமான தோல் செருப்படியில் நசுங்கி அந்த அப்பிராணி மேஜையோடு ஒட்டிக் கொண்டு அநியாயமாய் உயிரை விட்டது. பெரிய வீர தீரச் செயல் செய்து விட்டவரைப் போன்று பெரியவர் செருப்பினாலேயே மிக அலட்சியமாக இறந்து போன கரப்பை மூலையில் தள்ளினார். பின் நிதானமாக லெட்ஜரைப் புரட்டி "வெங்கட்ராமா..." என்று உரத்த குரலில் அழைத்தார். அடுத்த அறையிலிருந்து நடுத்தர வயது மனிதர் ஒருவர் வந்தார். அவர் முகத்திலும் சிரிப்பில்லை. கையில் ஒரு பெரிய தடி வைத்திருந்தார்.

"வெங்கட்ராமா. பிரான்ஸ் நாட்டுக்காரர்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கிற 5ம் நம்பர் அறையை இவர்களுக்குக் கொடு. நாளைக்காலை ஒன்பது மணிக்குள் இவர்களை காலி பண்ண வைத்து விடு. சாவியை எடுத்துக் கொண்டு

போ!"

சாவியை எடுத்துக் கொண்ட அந்த மனிதர் அவளைப் பார்த்து "ப்ளீஸ் கம் வித் மீ..." என்றார். தங்கள் பெட்டிகளை இழுத்துக் கொண்டு அவருடன் சென்ற போது அவள் அவரிடம் கேட்டாள்.

"ஆபீஸ் அறையில் இருக்கும் அந்தப் பெரியவரின் பெயர் என்ன சார்...?"

"அவர் பெயர் விட்டல். அவர்தான் ஆஸ்ரமத் தலைவர். ஸ்வாமிஜியின் நேரடி சிஷ்யர்."

கரப்பான் பூச்சியை அடித்த அவரது வெறி அவளது மனதை நெருடிற்று. ஆழமான பெருமூச்சுடன் மேலும் தொடர்ந்தாள்.

"நீங்கள்...?"

"நான் அவருடைய காரியதரிசி."

"எத்தனைக் காலமாக ஆஸ்ரமத்தில் இருக்கிறீர்கள்?"

"நினைவு தெரிந்த நாள் முதல் இங்குதான் இருக்கிறேன்" என்றவர் சட்டென்று நின்றார். "ஒரு நிமிடம் இங்கேயே இருங்கள். நாய்க்கு பிஸ்கட் கொண்டு வருகிறேன். இந்த நேரம் பிஸ்கட் நேரம். பாவம் பசிக்கும்" என்று கூறி விட்டுப் போனார்.

அதைக் கேட்டு அதுவரை இருண்டிருந்த அவள் முகத்தில் சின்னப் பிரகாசம் எட்டிப்பார்த்தது.

வெங்கட்ராமன் பிஸ்கட் பாக்கெட் மட்டுமின்றி கூடவே அரை ஆள் உயரத்திற்கு நாய் ஒன்றைக் கூட்டி வந்தார். நல்ல புஷ்டியான நாய். மொழு மொழுவென்றிருந்தது. காதுகள் இரண்டும் மேல் நோக்கி கஞ்சி போட்ட புடவை மாதிரி விடைத்துக் கொண்டு நின்றதில் நல்ல ஜாதி நாய் என்பது தெரிந்தது.

"திஸ் ஈஸ் ஆஸ்ரம் டாக். யோகின்னு பேரு."

ஒவ்வொரு பிஸ்கட்டாகத் தூக்கி மேலே போட்டார். பிஸ்கட் கீழே விழுவதற்கு முன் தேர்ச்சி பெற்ற கிரிக்கெட் வீரனைப் போன்று காட்ச் பிடித்து மொறுமொறுவென்ற சத்தத்துடன் கடித்துத் தின்றது. மணலில் படுத்திருந்த நாய்கள் யோகி பிஸ்கட் தின்பதைப் பார்த்து விருட்டென எழுந்து ஓடி வந்தன. அவை நெருங்கும் முன்னரே வெங்கட்ராமன் கக்கத்து கைத்தடியை எடுத்து ஓங்கியவாறு அவைகளை அடிக்கப் பாய்ந்தார். அந்த நாய்கள் மருண்டு தூர ஓடுவதை ஒரு வித வலியும், வேதனையுமாகப் பார்த்தாள் அவள்.

"நிறைய பிஸ்கட்டுகள் இருக்கின்றனவே. அந்த நாய்களுக்கும் போடலாமே"...

**இளமை, புதுமை**
**எதிலும் முதன்மை**

நிறுவிய ஆசிரியர்
**எஸ்.ஏ.பி.**

நிறுவிய பதிப்பாளர்
**பி.வி. பார்த்தசாரதி**

சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர்
**பா. வரதராசன்**

அச்சிட்டு வெளியிடுபவர்
**பா. வரதராசன்**

குமுதம் ஆசிரியர்
ச. கோசல்ராம்

ஆசிரியர்
க. ராமச்சந்திரன்
(ப்ரியா கல்யாணராமன்)

பொறுப்பாசிரியர்
இரா. மணிகண்டன்

துணை ஆசிரியர்
இளையரவி

துணைத் தலைமை நிருபர்
அன்வர்

உதவி ஆசிரியர்கள்
கடற்கரய், தளவாய் சுந்தரம்

நிருபர் குழு
ஆனந்த் செல்லையா, தேனி கண்ணன்
மணிவண்ணன், வீரகேரளம் சரவணன்,
சிந்துகுமார், அரண்மனை கட்டு, அரவிந்த்,
ஜோசப், கார்த்திகேயன்.

புகைப்படக் கலைஞர்கள்
சித்ராமணி, ஆர். சண்முகம்

**குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண்.151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.**

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கருத்துக்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. பிரசுரமாகும் கதை, கட்டுரை மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் பதிப்பாளரே உரிமையாளராவார். மறுபிரசுரம் செய்யவோ, மற்ற வேறு வகையில் படைப்புகளை பயன்படுத்தவோ நிர்வாகத்தினரின் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும்.

பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளுக்கு பி.ஆர்.பி சட்டப்படி ஆசிரியர் குழுவே பொறுப்பு.

கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :
தபால் பெட்டி எண் : 2592, சென்னை 600 031.
தொலைபேசி எண் : 26422148
ஃபேக்ஸ் எண் : 26425041
இ-மெயில் : edtl@kumudam.com

என்றான் ராபர்ட்.

“ஒய் ஷுட் ஐ?” - சடாரென அவனைத் திரும்பிப் பார்த்தார் வெங்கட்ராமன் “தே ஆர் நாட் அவர் டாக்ஸ். தே ஆர் ஸ்ட்ரீட் டாக்ஸ்!”

அதற்கு மேல் அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை! சட்டென்று ராபர்ட்டை நிமிர்ந்து பார்த்த பார்வையில் அடிபட்ட வலி தெரிந்தது.

“லெட்ஸ் கோ ராபர்ட். நாம் இங்கு தங்க வேண்டாம். தேங்க் யு மிஸ்டர் வெங்கட்ராமன். அனாவஸ்யமாய் உங்களுக்கு சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவும்.”

ஆஸ்ரமத்தை விட்டு வெளியில் வந்து திண்ணை மாதிரி போடப்பட்டிருந்த கருங்கல் மீது அமர்ந்தவளின் முகம் வெளிறிப் போயிருந்தது.

“நாம் கிளம்புவதற்கு முன் பக்கத்தில் ஏதாவது கடை இருக்கும். நாலைந்து பிஸ்கட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வா ராபர்ட் மணலில் பசியோடு படுத்திருக்கும் அந்த நாய்களுக்குப் போட்டு விட்டுப் போகலாம்!” - என்றான்.

“தட்ஸ் கிரேட்!” என்று ராபர்ட் அகல, அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் பீறிட கைகளில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள் அவள்..●